# சட்டமாணிப் பரீட்சை, வருடம் IV - 2016/2017

## மனித உரிமைகள் சட்டம்

(மூன்று மணித்தியாலங்கள்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 06

முதலாவது வினாவையும் ஏனைய எவையேனும் மூன்று வினாக்களையும் தெரிவுசெய்து நான்கு வினாக்களுக்கு மட்டும் விடைதருக.

(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்)

1. சர்வதேச பொருளாதார அட்டவணையின் பிரகாரம், நீண்டகாலம் இடம்பெற்ற உள்நாட்டு ஆயுதமோதல் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு ஐந்து ஆண்டுகள் நிறைவடைந்துள்ள போதிலும், சுந்தர்லாந்து என்ற அரசின் பொருளாதார வளர்ச்சி வீதமானது தொடர்ந்தும் மிகக் குறைந்ததாகவே காணப்படுகின்றது. சர்வதேச சமூகத்தின் முன்னால், அரசானது தவறாக உருவகப் படுத்தப்பட்டுள்ளதனால், நாட்டின் பொருளாதார நிலைமைகளை உறுதிப்படுத்துவதற்கான எந்தவொரு படிமுறைகளையும் அரசாங்கத்தினால் எடுக்க முடியாதிருப்பதாக சுந்தர்லாந்தினது நிதியமைச்சர் அண்மையில் தெரிவித்துள்ளார். இருப்பினும், பொருளாதாரத்தை மீளமைத்துக் கொள்வதற்கு தன்னுடைய முன்மொழிவுகளை அரசாங்கம் கருத்திலெடுக்குமாயின், சுந்தர்லாந்துக்கு உதவியளிப்பதற்கு உலக வங்கி தற்பொழுது முன்வந்துள்ளது.

   இதனிடையே, சுந்தர்லாந்துவினது தலைநகருக்கு அண்மையில் அமைந்துள்ள கழிவுப் பொருட்களை அகற்றும் ஒதுக்கிடம் ஒன்றில் ஏற்பட்ட வெடிப்பொன்றின் காரணமாக முப்பதுக்கும் அதிகமான பொதுமக்கள் கொல்லப்பட்டனர். கழிவுப்பொருட்களை அகற்றுகின்ற பணியானது நாட்டில் தனியார் கம்பனிகளினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சுவாசத்தொகுதியுடன் தொடர்புபட்ட நோய்களினால் தாம் வருந்துவதாகவும், அகற்றல் ஒதுக்கிடத்திலிருந்து வெளிப்படுகின்ற சாக்கடை நாற்றம் காரணமாக தமது வீட்டுக்கு வெளியில் வந்து பொழுதைக்கழிக்கின்ற எந்த செயற்பாடுகளிலும் ஈடுபடமுடியாதுள்ளதாகவும் கழிவுப்பொருட்களை அகற்றுகின்ற ஒதுக்கிடத்துக்கு அண்மைய இடங்களில் வசிக்கின்ற குடும்பங்கள் முறைப்பாடு செய்கின்றனர்.

   மேலும், வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கவர்ந்திழுக்கவும் சுந்தர்லாந்தானது நிலையுறுதியான ஒரு நாடு என்ற பிரதிமையை உறுதிசெய்தல் என்பவற்றுக்கான ஒரு முயற்சியாக, நாட்டின் மனித உரிமைகளின் பாதுகாப்பு முறைமையை முன்னேற்றுவதனை இலக்காகக் கொண்ட சட்ட மறுசீரமைப்பை அரசாங்கம் மேற்கொள்ளுகின்றது. ஆனால், மதச்சார்பின்மை, சட்டவாக்கத்தைவிட மீயுயர் மனித உரிமைகள், வழக்காற்றுச் சட்டங்களின் பாரபட்சமற்றதன்மை ஆகிய விடயங்களில் அரசாங்கம் கொண்டுள்ள இறுக்கமான நிலைப்பாடு தொடர்பாக குடியியல் சமூகக்குழுக்கள் தொடர்ந்தும் கவலை தெரிவித்துவருகின்றன.

தொடர்ச்சி... 2ஆம் பக்கத்தில்

கமால் என்பவன் மெட்ரோபொலிடன் பல்கலைக்கழக மாணவர் இயக்கத்தின் தலைவனாவான். உலக வங்கியினால் செய்யப்பட்டுள்ள முன்மொழிவுகள் மற்றும் முழு அளவிலான சட்ட மறுசீரமைப்பை கோருகின்றமை என்பவற்றுக்கு எதிராக நாடு தழுவிய பல்வேறு கண்டனப் பேரணிகளை அவன் ஏற்பாடு செய்கின்றான். பொலிஸ் தடையினை எதிர்த்துநின்று கண்டனப் பேரணியொன்றுக்கு தலைமை தாங்கும்போது அவன் கைதுசெய்யப்படுகின்றான். பின்தொடர்ந்து நடைபெறுகின்ற சண்டையில், அவனுடைய கைகள் இரண்டும் உடைக்கப்படுவதுடன், அவனுக்கு மருத்துவக்கவனிப்பு வழங்குவதற்கான எந்தவொரு ஏற்பாடும் செய்யப்படவில்லை. கமாலுடைய தந்தை பொலிஸ் நிலையத்துக்குச் சென்று அவனைப் பார்வையிடுவதுடன், குடும்பத்துக்கு அவனால் ஏற்பட்டுள்ள அவப்பெயருக்கான தண்டனையாக 'கால்கள் முடமாகின்ற வரைக்கும்' அவனை அடிப்பதாக அச்சுறுத்துகின்றார்.

சுந்தர்லாந்துவினது சட்டமுறைமையானது இலங்கையினதை ஒத்ததாகும் என்று கருதிக்கொண்டு, நாட்டிலுள்ள மனித உரிமைகள் நிலைமையினை மதிப்பீடு செய்க. உமது மதிப்பீட்டின் அடிப்படையில், குறித்த நிலைமையினை முன்னேற்றுவதற்கு சட்டவாக்கத்துறை / நிருவாகத்துறையூடான அவசியமான நடவடிக்கைகள் தொடர்பான பரிந்துரைகளைச் செய்க.

(34 புள்ளிகள்)

2. 'அரசியலமைப்பு மறுசீரமைப்பு நடபடிமுறைச் செயன்முறை தொடர்பான எந்தவொரு தற்கால முயற்சி எதிலும், சம்பந்தப்பட்ட அரசுகளினால் பொறுப்பேற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச மனித உரிமைகள் கடப்பாடுகளுக்கு தகுந்த கவனஞ்செலுத்தப்படுதல் என்பது இன்றியமையாததாகும்.'

நீர் உடன்படுகின்றீரா? இலங்கையின் அரசியலமைப்பு மறுசீரமைப்பு நடபடிச் செயன்முறையில் கூர்ந்தாராயப்படுகின்றதான மனித உரிமைகள் தொடர்பான எவையேனும் மூன்று விடயங்களைக் கருத்திற்கொண்டு ஆராய்க.

(22 புள்ளிகள்)

3. 'சமத்துவம் மற்றும் பாரபட்சங்காட்டாமை என்ற கோட்பாடானது வேறுபட்டதான ஒரு தொகைப் பொருள்கோடல்களுக்கு உட்பட்டதாயிருக்கின்றது. எந்தவொரு பொருள்கோடலும் முற்றிலுஞ் சரியானதென்று கொள்ளமுடியாதென்பதோடு, இக்கோட்பாடானது பிரயோகிக்கப்பட வேண்டியதான வெவ்வேறு சூழ்நிலைகளைக் கருத்திற்கொள்கையில், 'சமமாக நடாத்துதல் ஆனால் சமமான நடாத்துகையின்றி' என்ற மனித உரிமைகள் அடிப்படையிலமைந்த அணுகுமுறையானது சமத்துவத்தையும் பாரபட்சமின்மையினையும் பொருளார்த்தமுள்ள சட்ட மற்றும் கொள்கைக் கருவிகளாக மாற்றுவதற்கான மிகச் சிறந்த தத்துவார்த்த அடிப்படையினை வழங்குகின்றது.'

மேலுள்ள கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? சமத்துவம் மற்றும் பாரபட்சங்காட்டாமை என்ற கோட்பாட்டினதும் அதனது இன்றைய நடைமுறைப் பிரயோகம் தொடர்பான உமது கருத்தியல் ரீதியிலான விளக்கத்தின் பின்னணியில் ஆராய்க.

(22 புள்ளிகள்)

*தொடர்ச்சி... 3ஆம் பக்கத்தில்*

4. நரசிம்மா என்பது வேறுபட்ட பெரியளவான இன மற்றும சமய சமூகங்களைக் கொண்டுள்ள இறைமையுள்ள அரசொன்றாகும். நரசிம்மாவின் பெரும்பான்மைச் சமயமாக 'சுமாத்தோ' என்பதும், 'விக்கி' மற்றும் 'பகோரா' என்பன பரந்தளவில் பின்பற்றப்படுகின்றதுமான ஏனைய இரண்டு சமயங்களாகும். மனித உரிமைகள் ஆர்வலொருவரான திரு. நோர்மன் என்பவரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ள பின்வரும் விடயங்களைக் கருத்திற்கொள்க:

நரசிம்மர்கள் அனைவரும் தமது விருப்பத்தின்படி ஒரு சமயத்தைத் தழுவியிருத்தல் வேண்டுமென்பதுடன், தமது சமய நடைமுறைகளை அனைவரும் பகிரங்கமாகப் பின்பற்றுதல் கட்டாயமானதாதல் வேண்டும்; மற்றும் சமய நம்பிக்கை மற்றும் நடைமுறைகள் தொடர்பில் செய்யப்படுகின்ற ஏதேனும் கருத்துரைகள் அல்லது அவதானிப்புக்கள் என்பன எந்த சூழ்நிலைகளிலும் சகித்துக்கொள்ளப்படமாட்டாது என்பதுடன் அவை கடுமையான குற்றவியல் தண்டனைக்கு உட்பட்டதாகவும் இருக்கும் என்பதாக விதந்துரைக்கின்ற சுற்றிக்கையொன்றை பாதுகாப்பு அமைச்சர் வெளியிடுகின்றார். நாட்டின் அதியுயர் சமயம் சுமாத்தோ என்பதாகவும் சுமாத்தோவினது மதகுருமார் குடியியல் மற்றும் குற்றவியல் தண்டனைகளிலிருந்து விடுபாட்டுரிமையுடையவர்கள் என்பதாகவும் நரசிம்மாவின் அமைச்சரவை பிரகடனஞ் செய்கின்றது.

விக்கி வழிபாட்டுத்தளங்களில் வணக்க வழிபாடுகளில் ஈடுபடக்கூடாதெனவும், இரண்டு குழுக்களுக்கிடையில் கலப்புத் திருமணம் தடைசெய்யப்பட்டுள்ளதென்றும் பாரம்பரிய விக்கி நம்பிக்கையாளர்கள் மீதான சமயத்தீர்பொன்றை மறுசீரமைக்கப்பட்ட விக்கி நம்பிக்கையாளர்களின் தலைவர்கள் சாற்றுரை செய்கின்றனர். பகோரா மக்களுக்கான பிரத்தியேகமான விதிகளின் கோவையொன்றையும், வழக்கு-விசாரணை முறைமை மற்றும் தண்டனை தொடர்பான பட்டியல் ஒன்றினையும் முன்னணி பகோரா மதகுருமார் முன்மொழிவு செய்கின்றனர்.

தேசிய மற்றும் சர்வதேச தராதரங்களின் பின்னணியில் மேலுள்ள விடயங்கள் தொடர்பான ஆலோசனைக் குறிப்பொன்றைத் தயார்செய்யுமாறு திரு. நோர்மன் உம்மை வேண்டுகின்றார். மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச ஆவணங்கள் அனைத்துக்கும் நரசிம்மா அரசுத்திறமொன்றாகும் என்பதுடன், நரசிம்மாவினுடைய அரசியலமைப்பானது இலங்கையின் அரசியலமைப்பைப் போன்றதாகும் என்பதனைக் கருத்திற்கொண்டு ஆலோசனைக் குறிப்பை தயார்செய்க.

(22 புள்ளிகள்)

5. தற்காலத்தில், சமூக நீதியையும் மனித கௌரவத்தையும் கலாசார பிரிவுகள்கடந்த ஒரு கண்ணோட்டத்தில் விளங்கிக்கொள்வதற்கு மனித உரிமை அறிஞர்கள் விளைகின்றனர். இத்துறையில் இது முக்கியமானதொரு வளர்ச்சியாகக் கருதப்படுகின்றது. மனித உரிமைகளானவை அனைத்துலகத்தன்மை கொண்டவை என்ற பொதுவானதொரு புரிந்துகொள்ளல் இருப்பினும், வேறுபட்ட சமூகங்களில் மனித உரிமைகளின் பிரயோகமானது அனைத்துலகத் தராதரங்களின் ஏற்புடைத்தன்மையினை எப்போதும் கேள்விக்குட் படுத்துகின்றது. ஒருவரின் சொந்த கலாசாரச் சூழ்நிலையினுள் பன்மைத்துவத்தையும் மனித கௌரவத்தையும் மதிப்பளித்தல் என்பதே உண்மையான விசுவாசத்துடன் மனித உரிமைகளுக்கு மதிப்பளிப்பதான எந்தவொரு வெற்றிகர முயற்சிக்குமான திறவுகோலாகும்.

மேலுள்ள கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? ஆராய்க.

(22 புள்ளிகள்)

*தொடர்ச்சி... 4ஆம் பக்கத்தில்*

6. டொனால்ட் டக்கென் என்பவன் மிகவும் கடுமையாகத் தேடப்படுகின்ற தீவிரவாத சந்தேக நபரொருவன் என்பதுடன், தற்பொழுது புட்டின்லாந்து என்ற நாட்டின் பொலிஸ் கட்டுக்காவலில் தற்பொழுது வைக்கப்பட்டுள்ளான். தீவிரவாதக் குற்றமொன்று தொடர்பில் அவன் விசாரணை செய்யபப்டுகின்றான். அவனுடைய சட்டத்தரணி உட்பட எந்தவொரு வருகைதரு பார்வையாளரும் அவனுக்கு அனுமதிக்கப்படவில்லை. பொலிஸ் கட்டுக்காவலில் கடுமையான சித்திரவதைக்கு தன்னுடைய கணவன் உட்படுவதாக நம்பத்தகுந்த தகவல் அவளுக்குக் கிடைப்பதாக டொனால்டடின் மனைவியான டைஸி மௌல்னியா முறைப்பாடு செய்கின்றாள். அவனை விசாரணை செய்கையில் பொலிஸ் அதிகாரிகள் திட்டுகின்ற வகையில் அடிக்கடி பேசுவதாகவும் உயிரச்சுறுத்தலான உடல்ரீதியான தொந்தரவினையும் செய்வதாகவும் அவள் தெரிவிக்கின்றாள். தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்வ தற்காக டொனால்டின் மீது குறைந்பட்சமானதும் அவசியமானதுமான பலப்பிரயோகத்தை மாத்திரம் பொலிஸார் பாவிப்பதாக புட்டின்லாந்துவினது பிரதம பொலிஸ் அதிகாரியான போனி ஜோன்னி வலியுறுத்துகின்றார். இதனிடையே, தீவிரவாதத்தைத் தோற்கடிப்பதற்கு சாத்தியமான அனைத்துப் படிமுறைகளையும் எடுப்பதற்கு அரசாங்கம் தயக்கங்காட்டாது என்பதாக பாதுகாப்பு அமைச்சர் ஊடகங்களுக்கு விடுத்துள்ள கூற்றொன்றில் மீளவலிறுத்தியுள்ளார். பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டம் மற்றும் அவசரகால ஒழுங்குவிதிகள் என்பவற்றை நாட்டிலுள்ள தீவிரவாதத்தைத் தோற்கடிக்கும் நோக்கத்துக்காக சொல்நேர் புறவயக்கருத்து மற்றும் மெய்பொருள் என்வற்றின் பிரகாரமும் புட்டின்லாந்துவினது பொலிஸார் செயற்படுவதாகவும் அவர் பொதுமக்களுக்கு அறிவித்தல் விடுக்கின்றார்.

சர்வதேச மனித உரிமைகளின் முக்கிய ஆவணங்கள் அனைத்துக்கும் புட்டின்லாந்து அரச திறமொன்றாகும் என்றும் அதன் அரசியலமைப்பு இலங்கையின் அரசியலமைப்பினை ஒத்ததாகும் என்றும் கருதிக்கொள்க. பின்வருவனவற்றுக்கு விடை தருக:

சட்ட வழக்கொன்றை மௌல்னியா தொடங்குவதற்கு முடிவதற்கு அடிப்படையான காரணங்கள் ஏதேனுமிருப்பின் ஆராய்க.

போனி ஜோன்னியால் செய்யப்பட்ட கூற்றினுடைய சட்ட விளைவுகள் எதுவாகவிருக்கும்?

சர்வதேச மனித உரிமைகளின் முக்கிய ஆவணங்களுக்கு புட்டின்லாந்து அரச திறமொன்றாக இல்லாதிருப்பின், உமது விடையானது வேறுபடுமா?

உமது விடையினை பொருத்தமான நியதிச்சட்டம் மற்றும் தீர்ப்புச்சட்ட அதிகாரங்களால் ஆதாரப்படுத்துக.

(22 புள்ளிகள்)

*************************